DEPOSITION OF WITNESS.

(Chapter XXV, B.N.S.S)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 221 /2015

Deposition of PW 9 / LW 10

| | | |
|---|---|---|
| Name | : | திரு. குமார் |
| Father's / Husband Name | : | ராமநாதன் |
| Village | : | கே.புதூர் |
| Taluk | : | மதுரை |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.02.2026

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1.) நான் தற்போது மதுரை நகர் Q–பிரிவு குற்ற புலனாய்வு துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.03.2014 ம் தேதி 20.00 மணிக்கு ஆண்டிபட்டி குற்றவியல் மற்றும் உரிமையியல் நடுவர் நீதிபதி அய்யா அவர்களிடம் இருந்து வரப்பெற்ற புகாரினை பெற்று கண்டமனூர்காவல் நிலைய குற்ற எண்.41/2014 பிரிவுகள் 452,294(பி),323,324,506(1),420 இ.த.ச. மற்றும் 4 of TNPHW Act பிரகாரம் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2**

2.) அன்றைய தினமே சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான மனோகரன் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4**. சாட்சிகள் 1 – 7 சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் தனித்தனியே பதிவு செய்தேன்.

3.) பின்பு அன்றைய தினமே இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 452,294(பி),323,324,506(1),420 இ.த.ச. மற்றும் 4 of TNPHW Act ல் இருந்து பிரிவுகள் 294(பி),323,324,506(1) இ.த.ச. மற்றும் 4 of TNPHW Act ஆக மாற்றம் செய்து

சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையினை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.5.**

4.) 19.03.2015 ம் தேதி இவ்வழக்கில் CSR பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் மணிமாறன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அன்றைய தினமே இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த க.விலக்க மருத்துவர் பாலமுருகன் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த காய்சான்று அசா.ஆ.6.** எதிரிகள் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்தேன். பின்பு 19.03.2015 ம் தேதி அனைத்து விசாரணைகளையும் முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

1. புகார்தாரர் 1 வது எதிரியின் அத்தையும், மாமியாரும் ஆவார் என்றால் சரிதான். 2 வது எதிரி 1 வது எதிரியின் தம்பி ஆவார் என்றால் சரிதான். அசா.2,3 பாண்டியம்மாள், ஈஸ்வரி ஆகியோர் அசா.1 க்கு மகள்கள் ஆவார்கள் என்றால் சரிதான். அ.சா.3 ஆனவர் 1 வது எதிரியின் மனைவி ஆவார் என்றால் சரிதான். அசா.2 பாண்டியம்மாள் என் விசாரணையில் எதிரிகள் இருவரும் சண்டை போடும் நோக்கத்தோடு ஆவேசமாக என் அம்மா வீட்டிற்குள் வந்தார்கள் என்று சொல்லியுள்ளாரா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை.

2. பார்வை மகஜரில் சம்பவயிடம் என்பது அசா.1 ன் வீடு என்றால் சரிதான். அதை ஒட்டி கிழக்கு பக்கம் நாகராஜ் என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 வீடு உள்ள தெருவிலேயே 9 வது வீடாக அருண்பாண்டியின் வீடு , மற்றும் நல்லம்மாள்கோவில் பூசாரி வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடம் அருகே நல்லம்மாள்கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலில் சம்பவத்தன்று எதிரிகளும் அசா.1 –5 வரையுள்ளவர்களின் சமுதாயத்திற்கான கூட்டம் ஒன்று நடைபெற்றதாக நான் என் புலன் விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் அது பற்றி தெரிந்து கொள்ளவில்லை. நல்லமாள் கோவில் அ.சா.1 ன் வீட்டிற்கு நேர் எதிரில்

உள்ளது என்றால் சரிதான்.

3.அ.சா.1 ன் வீடும் நல்லம்மாள்கோவிலும் 10 –20 அடி தொலைவில் கூப்பிட்டால் கேட்கும் தொலைவில் இருக்கிறது என்றால் சரிதான். அசா.1,2 க்கும் எதிரிகளுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை உள்ளது என்றால் வியாபாரத்திற்கு பணம் வாங்கியது தொடர்பாகவும், சீதன பொருட்களை அடகு வைத்தது தொடர்பான பிரச்சனை இருந்து வந்தது. ரொக்கப்பணம் கைமாறியது தொடர்பான ஆவணம் ஏதும் கொடுத்துள்ளார்களா என்றால் சொந்தங்களுக்குள் கொடுக்கல் வாங்கல் இருந்ததால் தாக்கல் செய்யவில்லை.

4. பணம் சம்பந்தமாக ஏமாற்றிவிட்டார்கள் என்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவ சமயம் அ.சா.2 வெளியூரில் கூலி வேலை செய்ததாக என் புலன் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அ.சா.1 லட்சுமி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்து அந்த புகாரின் அடிப்படையில் நான் விசாரணை மேற்கொண்டேனா என்றால் காவல் நிலையத்தில் ஏற்கனவே மனு ரசீது கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டுள்ளது. காவல் கூடுதல் கண்காணிப்பாளர், பொது தகவல் அலுவலருக்கு அ.சா.1 புகாரின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணை அடிப்படையில் நான் அறிக்கை வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். **நான் கூடுதல் கண்காணிப்பாளர், பொது தகவல் அலுவலருக்கு கொடுத்த அறிக்கையினை தகவல் அறியும் உரிமச் சட்டத்தின் கீழ் காவல் கூடுதல் கண்காணிப்பாளர், பொது தகவல் அலுவலரிடம் இருந்து பெறப்பட்டது எ.சா.ஆ.1.**

5. அந்த புகாரில் இரண்டு எதிரிகளின் மீதும் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மனுவின் மீது விசாரணை முடிவு என்பது பணம் தொடர்பான பிரச்சனையை நீதிமன்றத்தில் தீர்த்துக் கொள்ள வேண்டியது என்றும், அ.சா.2 ன் தவறான நடத்தையை கண்டித்ததன் பேரில் அவர்கள் கிராமத்திற்கு எந்த கௌரவ குறைச்சல் வராதவாறு நடந்து கொள்கிறேன் என்று கூறியதால் மனுவின் விசாரணை முடிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரிதான். அந்த மனு விசாரணை முடிவில் எதிரிகள் இருவரும் அ.சா.1,2 , அசா.2 ன் கணவர் ஆகியோர்கள் வீடு கட்டிக்

கொள்வதற்கு எந்த இடையூறும் செய்யமாட்டோம் என்ற எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் சாட்சியாக கே.சுப்புராஜ், ராஜமூர்த்தி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

6. அ.சா.2 வெளியூரில் வேலை செய்து வந்தபோது ஜி.உசிலம்பட்டி வரும் போது வேறு நபர்களுடன் பாலியல் தொடர்பு வைத்திருந்தது தொடர்பான பிரச்சனை இருந்து வந்தது நான் என் விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான் அது தொடர்பாக மனு விசாரணை முடிக்கப்பட்டது. அது தொடர்பாக ஊர்க்காரர்கள் எதிர்பு மனு கொடுத்தார்கள் என்றால் வழக்கு கோப்பில் இல்லை. அது தொடர்பாக செய்தித்தாளில் செய்தி வந்தது என்றால் சரிதான். அ.சா.2 பாலியல் தொடர்பு வைத்திருந்தது தொடர்பான பிரச்சனையை எதிரிகள் கண்டித்ததால் தான் அசா.2 அ.சா.1 மூலம் எதிரிகளின் மீது பொய்யான புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அசா.1 என்னிடம் அளித்த புகாரில் ரேகையை தான் வைத்துள்ளார் என்றால் நீதிமன்றத்தில் இருந்து வந்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

7. அ.சா.1,2 சொல்வது போல் எதிரிகள் அவர்களை எந்த துன்புறுத்தலும் செய்யவில்லை என்றும், அசா.1,2 சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது புகார் அளித்தால் அசா.2 ன் நடவடிக்கையினை கண்டுகொள்மாட்டார்கள் என்பதால் எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கினை நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஆஜர் எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல .

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.25 18:13:56 +0530

Judicial Magistrate,
Andipatti.